# பாரதிய ஜனதா கட்சி

11, அஷோகா சாலை, புது தில்லி

ஊடக அறிக்கை:: 2014 ஜனவரி 20

ஆந்திர மாநில சீமந்தரா பகுதியைச் சேர்ந்த 250க்கும் மேற்பட்ட பாரதிய ஜனதா கட்சியின் முக்கிய பொறுப்பாளர்கள் இன்று ஜந்தர் மந்தரில் ஆந்திர மாநிலத்தை இரண்டாகப் பிரிக்கும்போது சீமந்தரா பகுதிக்கு ஏற்படும் பாதிப்புக்கு நியாயம் கோரி தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். நாடாளுமன்ற உறுப்பினரும் பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் தலைவருமான ஸ்ரீ எம். வெங்கைய நாயுடு, அவர்களிடையே உரையாடினார். அவர் உரையில் பின்வரும் முக்கியமான கருத்துகளை வலியுறுத்தினார்:-

காங்கிரஸ் கட்சியினர் ஆந்திர மாநிலத்தைப் பிரிக்கும் பிரச்சினையை தங்களுடைய உட்கட்சி விவகாரமாக கருதுகிறார்கள். இந்த ஒட்டுமொத்த விவகாரத்தையும் இவர்கள் தவறாகக் கையாண்டிருப்பதோடு மிகவும் பொறுப்பற்ற, பக்குவமற்ற முறையிலும் நடந்துகொள்கிறார்கள். இந்த விவகாரத்தைக் கடந்த 9 வருடங்களாக ஆறப் போட்டு வந்திருக்கும் இவர்கள், 2004ல் ஆட்சி அதிகாரத்திற்கு வந்த பிறகு இப்போது, அதுவும் திடீரென்று தேர்தல்கள் நெருங்கி வரும் சந்தர்ப்பத்தில், நரேந்திர மோடியை எதிர்கொள்ள முடியாமல், ஆந்திராவில் தெலுங்கானாவை உருவாக்கி அது பற்றி பேசிவருகின்றனர். இப்போதும்கூட இந்த விஷயத்தில் இந்த அரசுக்கு தெளிவான கருத்தோ அல்லது பொறுப்புணர்வோ இல்லை.

திரு நாயுடு, பா.ஜ.க. தனி தெலுங்கான மாநிலம் உருவாவதை உறுதிசெய்வதோடு சீமந்தரா பகுதி மக்களுக்கு நியாயம் வழங்கவும் உறுதிபூண்டுள்ளது என்று கூறினார். இந்த விஷயத்தில் எந்த வகையான முரண்பாடோ, கட்சியின் நிலைப்பாட்டில் எந்த மாற்றங்களோ கிடையாது. பா.ஜ.க. 10 மாவட்டங்களுடன் கூடிய தெலங்கானா மாநிலத்தை உருவாக்க உறுதியேற்றுள்ளது. தற்போது கொண்டு வரப்பட்டுள்ள மசோதா குறைபாடுகளுடன் உள்ளது என்பதோடு மாநில மக்களின் கவலைகள், குறிப்பாக சீமாந்தரா பகுதி மக்களின் கவலைகளைப் புறக்கணிக்கிறது. தெலங்கானா பகுதியில்கூட, இந்த மசோதாவில் உள்ள குறிப்பிட்ட விஷயங்கள் குறித்த கவலை எழுந்துள்ளது.
திரு நாயுடு, மாநில சட்டமன்றத்தின் கருத்தைக் கேட்ட பின் மத்திய அரசு அந்தப் பகுதியின் கவலைகள் குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும், பல்வேறு கட்சிகளும் மக்களும் கூறிய நேர்மறையான ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு மசோதாவில் தேவையான மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும். பா.ஜ.க.வைப் பொருத்தவரை, மாநிலம் பிரிக்கப்பட வேண்டும், ஆனால் அதே நேரத்தில் சீமாந்தரா பகுதி மக்களுக்கும் நியாயம் வழங்கப்பட வேண்டும் என்று விரும்புகிறது. காங்கிரஸ் இதைச் செய்யாவிட்டால், அதிகாரத்திற்கு வரும்போது பா.ஜ.க. செய்யும்.

பொறுப்பற்ற சில தலைவர்கள் பேசும் ஆத்திரமூட்டும் வகையிலான உரைகளைக் கேட்டு ஆவேசப்பட வேண்டாம் என்றும் தெலுங்கானாவை ஆதரிப்பதாகக் கூறிவிட்டு பிறகு தங்கள் நிலைபாட்டை மாற்றிக்கொண்ட தலைவர்கள், கட்சிகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்றும் திரு வெங்கையா நாயுடு மக்களைக் கேட்டுக்கொண்டார். கடுமையான தூண்டுதல்களால் தாற்காலிகமாக உணர்ச்சிவசப்பட்டு எதிர்வினை புரிந்தாலும் கட்சிக் கட்டுப்பாட்டை மீறாமல் நடந்துகொண்டதற்காக சீமந்தரா பகுதியிலும் தெலுங்கானா பகுதியிலும் உள்ள பா.ஜ.க. கட்சித் தொண்டர்களை திரு. வெங்கையா நாயுடு பாராட்டினார். மத்தியில் உள்ள கட்சி இந்த மசோதாவையும் சீமாந்தரா பகுதி கட்சித் தலைவர்களின் நேர்மறையான ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டும் தீவிரமாக ஆராய்ந்துவருவதாகவும் இந்த மசோதா நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும்போது தேவையான திருத்தங்களை கட்சி கொண்டுவரும் என்று திரு நாயுடு சீமாந்தரா பகுதி மக்களிடம் உறுதி கூறினார்.

இந்தப் பிரச்சினையை பா.ஜ.க.வாக இருந்தால் வேறு மாதிரி கையாண்டிருக்கும் என்று திரு நாயுடு கூறினார். மசோதாவைக் கொண்டு வருவதற்கு முன் அதில் சம்பந்தப்பட்டிருக்கும் பல்வேறு பிரிவினருடன் பேசியிருக்கும், ஆளும் கட்சி உறுப்பினர்கள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏக்கள் மற்றும் பிற கட்சி தலைவர்களுடனும் முதலில் பேச்சு வார்த்தையும் அதன் பிறகு அவர்களை சம்மதிக்கச் செய்வது போன்ற நடவடிக்கைகள் எடுத்திருக்கும். இவற்றைத் தவிர சீமாந்தரா பகுதியில் ஐ.ஐ.டி.க்கள், வர்த்தக கல்வி நிலையங்கள், போன்ற ஒரு சில குறிப்பிட்ட கல்வி நிறுவனங்களுக்கான அனுமதி வழங்குதல், விமான நிலையங்கள் தரம் உயர்த்தல், இந்தப் பகுதியில் உள்கட்டமைப்புகளை உருவாக்குதல் போன்றவற்றை செய்வதன் மூலம் இந்தப் பகுதி மக்களுக்கு தாங்கள் புறக்கணிக்கப்படாமல், தங்களுடைய நன்மைகளும் கருத்தில் கொள்ளப்படுகின்றன என்ற ஆறுதலைத் தரும்படியான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும்.

இந்த மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு வரிச் சலுகை (Tax Holiday) அளிப்பதால், நிறைய தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு ஏராளமானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று திரு. நாயுடு பரிந்துரைத்தார். தொழிற்சாலைகள் நிறுவப்படும் என்று வெறும் வாய் வார்த்தையாக உறுதி அளிப்பது போதாது என்றும் அவை திட்டக் குழுவின் அனுமதி பெற வேண்டும் என்றும் அவற்றுக்கு நிதி ஒதுக்கீடும் செய்யப்பட வேண்டும் என்று திரு நாயுடு கூறினார். பல்வேறு பகுதிகளில் வளர்ச்சி மையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் பரிந்துரைத்தார்.

தற்போது திட்டமிடப்பட்டு இன்னமும் முழுமையடையாத மற்றும் பாசன வசதிக்கான உறுதி அளிக்கப்படாத அனைத்து நீர்ப்பாசன திட்டங்களுக்கும் சட்ட ரீதியான பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் அந்த மசோதாவில் பல்வேறு அரசாங்கங்களால் அனுமதிக்கப்பட்ட இந்த திட்டங்களும் குறிப்பிடப்பட்டு அவை

தொடரப்பட வேண்டும் என்றும் இது இரண்டு மாநிலங்களும் பிரிக்கப்பட்ட பிறகும் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் திரு நாயுடு கூறினார்.

போல்லாவரம் ஒரு பல்நோக்குத் திட்டமாக அறிவிக்கப்பட வேண்டும் என்று திரு நாயுடு வலியுறுத்தினார். அவர் மேலும் சீமாந்தரா பகுதியின் உயிர்நாடி போல்லாவரம் என்றும் கூறினார். இந்தத் திட்டம் குடிநீர் மற்றும் பாசன வசதித் தேவைகளை மட்டும் அல்லாமல் மின்சார உற்பத்திக்கும் பயன்படும். இந்தத் திட்டம் 1980-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது இதுவரை மறைந்த திரு சென்னா ரெட்டி, மறைந்த திரு அஞ்சயா மற்றும் மறைந்த திரு என்.டி. ராம ராவ் ஆகிய மூன்று முதலமைச்சர்கள் அடிக்கல் நாட்டினார்கள் என்பதையும் நினைவூட்டினார். ஆந்திர பிரதேச பா.ஜ.க. பிரிவு இந்தத் திட்டம் மிக விரைவில் முடிக்கப்பட வேண்டும் என்று மூன்று முறை தீர்மானம் நிறைவேற்றி, போராட்டங்களை நடத்தியது. போல்லாவரத் திட்டம் முடிக்கப்படுவதற்கான அனைத்துவிதமான தடைகளும் மாநிலம் பிரிக்கப்படுவதற்கான பேச்சுவார்த்தை நடைபெறுவதை கருத்தில் கொண்டு, 4-5 வருடங்களுக்குள் தீர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர் கருத்து தெரிவித்தார். நிலம் கையகப்படுத்துதல், அமிழ்த்தப்படுதல் போன்ற பிரச்சினைகள் தொடர்பாக எதிர்காலத்தில் வழக்குத் தொடரப்படுவதற்கான எந்த வாய்ப்பும் அளிக்கப்படாமல் மசோதாவிலேயே அவற்றுக்கான விதிகள் இயற்றப்படுவதும் மத்திய அரசின் கடமை என்று தெரிவித்தார்.

சம்பந்தப்பட்டவர்களிடம் கலந்தாலோசனை செய்த பிறகு, இந்த மசோதாவிலேயே புதிய மாநிலத்திற்கான தலைநகரையும் அரசு அறிவிக்க வேண்டும் என்றும் இதற்கான உள்கட்டமைப்பு வசதிகளும் அவற்றை உருவாக்குவதற்குத் தேவையான நிதியும் ஒதுக்கப்பட வேண்டும் என்றும் திரு நாயுடு விருப்பம் தெரிவித்தார். சீமாந்தரா பகுதியிலிருந்து வெகு தொலைவில் இருக்கும் ஹைதராபாத் இரண்டு மாநிலங்களுக்கும் தலைநகராக வெகுகாலம் நீடிக்க முடியாது என்றும் கருத்து தெரிவித்தார்.

ஹைதராபாத்தில் வசித்துவரும் ஆந்திர மாநிலத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்களின் நலன்கள்ப் பாதுகாக்கப்பட வேண்டும், இதற்காக பா.ஜ.க. பாடுபடும். அரசு ஊழியர்களை இரண்டு மாநிலங்களுக்கிடையே பகிர்ந்துகொள்வதில் அண்மையில் உருவாக்கப்பட்ட மாநிலங்களில் பின்பற்றப்பட்ட அதே கொள்கை பின்பற்றப்பட வேண்டும், என திரு நாயுடு கூறினார்.

தெலங்கானாவுக்கு ஆதரவாக உறுதியளித்த அரசியல் கட்சிகள் அந்த முடிவிலிருந்து பின்வாங்குவது அநீதியானது, அனைத்து கட்சியினரும் பொறுப்பு வாய்ந்த தலைவர்களும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கண்டு இரு மாநிலங்களாகப் பிரிப்பதற்கு ஒத்துழைக்க வேண்டும். ஆந்திராவில் தற்போது நிலவும் சூழலுக்கு அவர் நேரடியாக காங்கிரஸ் கட்சியும் மத்திய அரசும்தான் காரணம் என்று குற்றம் சாட்டினார். காங்கிரஸ் கட்சி பொறுப்பற்ற முறையிலும் பாரபட்சமாகவும் வெறும்

குறுகிய கால அரசியல் ஆதாயங்களைக் கருத்தில் கொண்டும் செயல்படுகிறது என்றும் கூறினார்.

பிரதமர் முன் மொழிகிறார், முதலமைச்சர் எதிர்க்கிறார், தேசிய தலைவர் முன்மொழிகிறார்.... மாநிலத் தலைவர் எதிர்க்கிறார் காங்கிரஸ் கட்சியின் அரசியல் காலாவதியாகிவிட்டது என்பதையே இது காட்டுகிறது என்று தன் உரையை முடித்தார் என்று காங்கிரஸ் கட்சியை நையாண்டி செய்கிறார், திரு நாயுடு..